<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1,</u>
<u>ஜெயங்கொண்டம்.</u>
<u>C.C.No. 87/2018</u>

2026ம் ஆண்டு மே மாதம் 21ஆம் நாள் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சி–04, திரு.ராஜேந்திரன் என்பவரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 56வது விதியின் பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.கோவிந்தராஜ், மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ராஜேந்திரன் | வயது | : | 75/26 |
| த.பெ/ க.பெ. | : | சிங்காரு | தொழில் | : | விவசாயம் |
| ஊர் | : | வாழைக்குறிச்சி | நிலை | : | LW 04 / PW04 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

( எதிரி ஆஜர் )

<u>முதல்விசாரணை:</u>

நான் தற்போது வாழைக்குறிச்சியில் வசித்து, விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். அவர் என் பக்கத்து வீட்டுக்காரர். அ.சா.1 எனது மனைவி. எங்களுக்கும் ஆஜர் எதிரி குடும்பத்திற்கும் இடையே மனைக்கட்டு சம்மந்தம்மாக பிரச்சனை இருந்தது.கடந்த 2018ம்வருடம் ஒருநாள் தேதி மாதம் நினைவில்லை, மாலை சுமார் 05.30 மணிக்கு மேல் நான் மாடு ஓட்டிக்கொண்டு வீட்டிற்கு வருவதற்குள் என் மனைவி வீடு கூட்டிக்கொண்டு இருக்கும்போது, ஆஜர் எதிரிக்கும் என் மனைவிக்கும்

இடையே வாய் தகராறு ஏற்பட்ட நிலையில், ஆஜர் எதிரி என் மனைவியை உருட்டுக்கட்டையால் தலையில் அடித்து மண்டையை உடைத்துவிட்டு, ஆஜர் எதிரி ஓடிவிட்டார். காயம்பட்ட என் மனைவியை நான் மருத்துவமனையில் சேர்த்தேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். எதிரி என் மனைவியை தாக்கியதாக என்னிடம் யார் சொன்னது என்றால் அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் சொன்னார்கள். யார் கூறினார்கள் என்று என்னால் பெயர் குறிப்பிட்டு கூற இயலுமா என்றால் இயலாது. எதிரி எனது மனைவியை தாக்கவில்லை என்றாலும், தகாத வார்த்தையால் திட்டவில்லை என்றாலும், கொலை மிரட்டல் விடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. எனது குடும்பத்திற்கும் எதிரியின் குடும்பத்திற்கும் இடையே பொழி சம்மந்தப்பட்ட பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரிதான். மேற்படி பொழி பிரச்சனையின் காரணமாக எதிரியின் மீது உள்ள முன்விரோதத்தின் காரணமாக, எனது மனைவி எதிரியின் மீது பொய்யான புகார் கொடுத்துள்ளார் என்றாலும், அந்த புகாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது வீட்டிலிருந்து வெளியில் வரும்போது அருகாலில் எனது மனைவி இடித்துக்கொண்டார் என்றாலும், அதனால் என் மனைவிக்கு ஏற்பட்ட எதிரி ஏற்படுத்தியதாக சொல்லி, பொய் புகார் கொடுத்துள்ளோம் என்றாலும் சரியல்ல.

/ உண்மை நகல்/

ஒம்/–P.கனிமொழி,

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்1,

ஜெயங்கொண்டம்.